செ.வெ.எண்:39 நாள்:22.02.2018

## கரூர் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு

கரூர் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளின் நலன் காக்க சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்திட அரசு ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, கரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் எதிர்வரும் 27.02.2018 அன்று (செவ்வாய் கிழமை) முற்பகல் 10.30 மணிக்கு மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. மாற்றுத் திறனாளிகள் தங்களது கோரிக்கைகளை மனுவில் குறிப்பிட்டு நேரில் அளிக்கலாம். இந்த கோரிக்கை மனுக்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட அலுவலர்களால் பரிசீலக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் நலத் திட்ட உதவிகள் வழங்க ஆவணச் செய்யப்படும். எனவே மாற்றுத் திறனாளிகள் இச்சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் கலந்துக் கொண்டு பயன்பெறுமாறு கரூர், மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.